## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.97/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு செப்டம்பர் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சிதம்பரம் | மதம் | : இந்து |
| த/பெ | : முத்தப்பமுதலி | ஜாதி | : -- |
| வயது | : 69 | கிராமம் | : முகப்பேரு |
| தொழில் | : பணி ஓய்வு | வட்டம் | : சென்னை, நொளம்பூர் |

12.09.2025

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கு தாவா சொத்து ஆதியில் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் ஆமாம். அவர் அரசு அங்கீகாரம் செய்த வீட்டு மனையாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் ஆமாம். ஒவ்வொரு வீட்டு மனையும் 2800 சதுரடியாக பிரித்து மனை எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மனை எண். 1 கோணலாக உள்ளது என்றால் ஆமாம். அதன் விஸ்தீரணம் 2725 சதுரடி என்றால் ஆமாம். இந்த வழக்கில் யோகலட்சுமியும் சந்தோஷ்குமாரும் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். பழனிக்கு மனை எண்.1ல் 1500 சதுரடியை விற்றுள்ளார்கள் என்றால் ஆமாம். அவர் அதை காசி செட்டிக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். மீதியுள்ள 1225 சதுரடியை உலகநாதனுக்கு விற்றுள்ளார்கள் என்றால் ஆமாம்.

2. 1225 சதுரடி மட்டும்தான் உலகநாதனுக்கு சொந்தமானது என்றாலும் ஆனால் அவரது பிள்ளைகள் செய்த 20.03.2009ம் தேதியிட்ட பாகப்பிரிவினையில் 1400 சதுரடி என விஸ்தீரணம் தவறாக காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதில் பிரச்சனை உள்ளது. பத்திரத்தில் 1400 சதுரடி இருப்பதை வைத்து கொண்டு அவர்கள் மனை எண்.2க்கு வர முயற்சித்ததால்தான் பிரச்சனை வந்தது என்றால் ஆமாம். மனை எண்.2ல் தெற்கே 1400 சதுரடியை முருகேசனுக்கு விற்றுள்ளார் என்றால் ஆமாம். அவரது மகன்தான் அ.வ.எண்.98/2014ன் வாதி சச்சிதானந்தம் என்றால் ஆமாம்.

வடக்கு பக்கம் உள்ள மீதி பாதியை வையாபுரி என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால் 2800 சதுரடிதான் பதிவு செய்ததாக சொன்னார்கள். 1400 சதுரடிக்கு பதிலாக 2800 சதுரடி என தவறுதலாக காட்டப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. 2800 எழுதியிருப்பதாக சொன்னார். இந்த தவறை கண்டுபிடித்து முருகேசன் வையாபுரியிடம் கேட்ட போது வையாபுரி முருகேசனுக்கு ஒரு பதிவு செய்யாத பத்திரத்தில் தனக்கு 1400 சதுரடி மட்டும்தான் பாத்தியம் என எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. இன்று வரை அந்த கடிதத்தின் அசல் முருகேசனிடம் உள்ளது என்றாலும் நகல்தான் பிரபாவதியிடம் உள்ளது என்றாலும் எனக்கு அது தெரியாது.

3. வையாபுரி தனக்கு பாத்தியப்பட்ட 1400 சதுரடியை வரதராஜ் என்பவருக்கு 06.08.1981ல் விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு அது தெரியாது. வையாபுரி 1400 சதுரடி கிரையம் வாங்கிவிட்டு தவறுதலாக தெரிந்து கொண்டே 1400 சதுரடியை வரதராஜ் என்பவருக்கு விற்ற பின்பு 1400 சதுரடியை சாலம்மாளுக்கு என்பவருக்கு விற்றுள்ளார் என்றால் எனக்கு அந்த விவரங்கள் தெரியாது. எனக்கு 1991ல் இருந்துதான் தெரியும். வரதராஜ் R. பிரபாவதி என்பவருக்கு 1400 சதுரடியை விற்றுவிட்டார் என்றால் தெரியாது. R. பிரபாவதிக்கு சாலம்மாள் 1991ல் 1400சதுரடிக்கு அதிகார முகவர் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. பிரபாவதி 2 ஆவணங்களையும் சேர்த்து மொத்தம் 2800 சதுரடியை டில்லிபாபுவிற்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் அதை கேள்விப்பட்டேன்.

4. சாலம்மாளுக்கு விற்பனை செய்ய வையாபுரிக்கு உரிமையே இல்லை என்றாலும் உரிமையே இல்லாமல் பெற்ற கிரையத்தின் அடிப்படையில் கொடுத்த அதிகார முகவர் ஆவணமும் செல்லாது என்றாலும் உண்மையில் டில்லிபாபுவிற்கு 1400 சதுரடி மட்டும்தான் பாத்தியம் என்றாலும் எனக்கு தெரியாது. மனை எண்.3ஐ ஆதியில் வடக்கு பக்கம் கதிர்வேல் கிரையம் பெற்று அவரிடம் அண்ணாமலை கிரையம் பெற்று அவரிடம் இருந்து அ.வ.எண்.97/2014ன் வாதி சிதம்பரம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். மனை எண்.3ன் தெற்கு பக்கம் முருகேசன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். அவரது வாரிசு தான் அ.வ.எண்.99/2014ன் பழனிவேல் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையர் அறிக்கையில் 3, 4 மனைகளுக்கு இடையே காலியிடம் இருப்பதாக குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு

தெரியுமா என்றால் முதலில் வந்த ஆணையர் அளந்துவிட்டு இடம் இல்லை என்று சொல்லிவிட்டார். இரண்டாவதாக வந்த ஆணையர் அளவீடு செய்து அங்கு காலியிடம் இருப்பதாக சொல்லியுள்ள விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அது குறித்து என் வழக்கறிஞர் ஆட்சேபணை செய்துள்ளார்.

5. பிரபாவதியின் மகன் பெயர் சந்தோஷ் குமார் என்றால் ஆமாம். சந்தோஷ் குமாருக்கு மனை.3, 4 க்கு இடையே உள்ள 2400 சதுரடியை பிரபாவதி 2014ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றாலும் தற்போது அந்த இடம் சந்தோஷ் குமாருக்குதான் பாத்தியம் என்றாலும் அந்த விவரம் தெரியும். சந்தோஷ் குமார் அதில் 770 சதுரடியை 12.09.2014ல் அருள்மிகு திருத்தணி சுப்பிரமணியசுவாமி கோவிலுக்கு தானம் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அந்த விவரம் தெரிந்து நாங்கள் கோவிலில் சென்று ஆட்சேபணை செய்தோம். அதற்கு எந்த பதிலும் கொடுக்கவில்லை. எங்கள் மனுவிற்கு ரசீதுகேட்டோம் ரசீதும் கொடுக்கவில்லை. சந்தோஷ் குமார் மீதி உள்ள 1330 சதுரடி இடத்தில் குடிசை வீடு அமைத்து இரவு காப்பாளர் வைத்து மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் இல்லை. நானும் அ.வ.எண்.98/2014ன் வாதி சச்சிதாநந்தமும் 99/2014ன் வாதி பழனிவேலும் சேர்ந்து அந்த குடிசை வீடு இருந்த இடத்தில் அத்துமீறி நுழைந்து இரவு காப்பாளரை அடித்து கம்பி வேலியை அப்புறப்படுத்தி குடிசையை அடித்து உடைத்துள்ளோம் என்றால் இல்லை. இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

6. எனது மனை தவறாக நான்கு எல்லை எழுதப்பட்டதையும் மனை எண்.2ல் விஸ்தீரணம் தவறாக எழுதப்பட்டதையும் வைத்து கொண்டு நானும் அ.வ.எண்.98/2014ன் வாதி சச்சிதாநந்தமும் 99/2014ன் வாதி பழனிவேலும் பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் எங்களுக்கு இடம் சரியாக உள்ளது. அப்போது எது தவறு என்றால் கோவிலுக்கு 770 சதுரடி எழுதியதாக சொல்வதுதான் தவறு. நாங்கள் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த போதாவது எங்கள் இடத்தை நிர்ணயம் செய்தோமா என்றால் ஆமாம். அந்த இடத்தைதான் கோவிலுக்கு எழுதி வைத்ததாக சொன்னார்கள். என்னிடம் காட்டப்படுவது எங்கள் இடத்திற்கான மனை வரைபடமா என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் மனை வரைபடம் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த வரைபடத்தில் மனை எண் 3க்கும் 4க்கும் இடையே

காலியிடம் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் அந்த காலியிடம் பூமியில் இல்லை. சந்தோஷ் குமார் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.96/2014 என வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு நடக்கிறது. அதில் நானும் தரப்பினரா என்றால் ஆமாம். ஒரு வருடத்திற்கு முன்பே அந்த வழக்கு தள்ளுபடி ஆனதாக சொன்னார்கள். அங்கீகரிக்கப்பட்ட மனை வரைபடத்திலேயே கிரையதாரரின் சொந்த இடம் என காட்டப்பட்டுள்ளது என்றாலும் நாங்கள் வீணாக பிரச்சனை செய்து வருகிறோம் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் எங்களிடம் எந்த தகராறும் செய்யவில்லை என்றாலும் சில ஆவணங்களில் நான்கு எல்லையும் சில ஆவணங்களில் விஸ்தீரணமும் தவறாக குறிப்பிட்டுள்ளதை சாதகமாக எடுத்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)